Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC.200/2025**

Preliminary Register

Deposition of **PW-4 LW-6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | வெற்றிச்செல்வன் | Husband Name | : | மணி |
| Village | : | புலவர்நத்தம் | Taluk | : | வலங்கைமான் |
| Calling | : | விவசாயி | Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of April 2026. Accused present.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு.R.கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>முதல் விசாரணை-</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது. என் முன்பாக யாரையும் போலீசார் கைது செய்யவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

கடந்த 12.04.2024ம் தேதி மதியம் 12.45 மணியளவில் நானும் சாட்சி சுதாகர் என்பவரும் ஆலங்குடி கடைத்தெருவில் நின்றுகொண்டிருந்தோம் என்றால் சரிதான். அங்கு எதிரி நின்றுகொண்டிருந்தார் என்றால் சரியல்ல. போலீசார் அவரை கைது செய்தாரா என்றால் சரியல்ல. எதிரி போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. எதிரியை போலீசார் கைது செய்தார்கள் என்றும், எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.04.06 14:36:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
VALANGAIMAN

Calendar
Miscellaneous **Case No. CC.200/2025**
Preliminary Register

Deposition of **PW-3 LW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாஸ்கர் | Husband Name | : | சிலம்பன் |
| Village | : | புலவர்நத்தம் | Taluk | : | வலங்கைமான் |
| Calling | : | விவசாயி | Age | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of April 2026. Accused present.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு.R.கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். 2024ம் வருடம் தேதி மாதம் ஞாபகமில்லை. மதியம் 01.30 மணியளவில் நான் புலவர்நத்தம் அருகே இருக்கும் போது போலீசார் வந்தார்கள். எதற்கு வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் எந்த பேப்பரிலும் கையொப்பம் செய்யவில்லை. தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

கடந்த 12.04.2024ம் தேதி காலை 09.00 மணியளவில் நான் சம்பவயிடத்தில் இருந்தேன் என்றால் அங்கு வந்த போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றாலும் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல. நான் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.04.06 14:36:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar
Miscellaneous **Case No. CC.200/2025**
Preliminary Register

Deposition of **PW-2 LW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாலு | Husband Name | : | காளிமுத்து |
| Village | : | புலவர்நத்தம் | Taluk | : | வலங்கைமான் |
| Calling | : | விவசாயி | Age | : | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of April 2026. Accused present.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு.R.கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். 2024ம் வருடம் தேதி மாதம் ஞாபகமில்லை. மதியம் 01.30 மணியளவில் நான் புலவர்நத்தம் அருகே இருக்கும் போது போலீசார் வந்தார்கள். எதற்கு வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் எந்த பேப்பரிலும் கையொப்பம் செய்யவில்லை. தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

கடந்த 12.04.2024ம் தேதி காலை 09.00 மணியளவில் நான் சம்பவயிடத்தில் இருந்தேன் என்றால் அங்கு வந்த போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றாலும் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல. நான் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.04.06 14:36:56 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC.200/2025**

Preliminary Register

Deposition of **PW-1 LW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுபநிதா | Husband Name | : | குமார் |
| Village | : | புலவர்நத்தம் | Taluk | : | வலங்கைமான் |
| Calling | : | வீட்டுக்குடித்தனம் | Age | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of April 2026. Accused present.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு.R.கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>முதல் விசாரணை-</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 02.04.2024ம் தேதி மாலை 06.00 மணியளவில் புலவர்நத்தம் வடக்கு தெருவில் எனது வீட்டில் இருந்தேன். நான் அன்று மதியம் புளியம்பழங்களை உலுக்கிவிட்டு வீட்டிலிருந்த போது எதிரி என் வீட்டு வாசலுக்கு வந்து உன்னை யார் புளியாம்பழம் உலுக்க சொன்னது உனக்கு அது கிடையாது என்று கண்ணா பின்னானு திட்டி விட்டு தென்னை மட்டையால் என்னை அடித்துவிட்டார். என்னை என் கணவர் ஆட்டோவில் அழைத்துக்கொண்டு

ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு முதல் சிகிச்சை அளித்துவிட்டு மேல்சிகிச்சைக்காக கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். எதிரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வலங்கைமான் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

புகாரை நான் எழுதவில்லை என்றால் சரிதான். புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றால் சரிதான். புகார் எந்த தேதியில் எத்தனை மணிக்கு கொடுக்கப்பட்டது என்று புகாரில் எந்த இடத்திலும் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் காலதாமதமாக கொடுக்கப்பட்டதற்கு சிறப்பு காரணம் எதுவும் கிடையாது என்றால் சரிதான். எனக்கு எதிரி கொழுந்தனார் முறை என்றால் சரிதான். எங்கள் இரண்டு குடும்பத்திற்கும் இடையே சொத்து சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றாலும் அதனால் 6 வருடங்களாக பேச்சுவார்த்தை கிடையாது என்றாலும் சரிதான். சொத்து தகராறு தொடர்பாக எங்கள் இரு குடும்பத்திற்கும் அடிக்கடி வாய்த்தகராறு ஏற்படும் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாருக்கான விபரங்கள் யார் சொல்லி கொடுத்தேன் என்றால் நானாகத்தான் கொடுத்தேன். பட்டியல் சாட்சி 6 எனது மாமா முறை ஆவார். பட்டியல் சாட்சி 7 எனது அக்காவின் கணவர் ஆவார். ஆலங்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்ட விபரத்தினை எனது புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் மருத்துவரிடம் காயம்குறித்து விபரம் சொன்னேன் என்றால் சரிதான். அதனை மருத்துவர் குறித்துக்கொண்ட பிறகு எனக்கு சிகிச்சை அளித்தார் என்றால் சரிதான். இவ்வழக்கில் சம்பவத்தின் போது எனது கணவர் குமார் எதிரி ராஜாவை தாக்கி காயம் ஏற்படுத்தியதாக வலங்கைமான் காவல் நிலைய குற்ற எண்.163/2024 ச.பி.294(b),323இதசவின் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அவ்வழக்கை ஒப்புக்கொண்டு எனது கணவர் அபராதம் செலுத்தி எனது கணவர் முடித்துகொண்டார் என்றால் சரிதான். எனது கணவரை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக நான் தகுந்த சட்ட ஆலோசனை பெற்று எதிரிக்கு எதிராக பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என்னை தாக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் எதிரி

தான் மிகவும் பாதிக்கப்பட்டவர் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் நேரத்தில் புகார் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.04.06 14:37:05 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.